# பாலைவனத்தில் நவீன நாடொன்றை உருவாக்கிய பழங்குடி தலைவர்கள்

# சொர்க்கபுரியான ஒரு நாட்டை “வாழும் நரகமாக” மாற்றிய இலங்கை அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடம்

## லத்தீப் பாரூக்

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைவரும் அபுதாபியின் ஆட்சியாளருமான ஷேக் கலிபா பின் சைத் 2022 மே 13ல் காலமானார். அவர் தனது மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒரு ஆட்சியாளராக இருந்தார்.

அவர் ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவரும் அபுதாபியின் ஆட்சியாளருமாக இருந்தவரும் இன்று உலகில் ஒரு நவீன நாடாகத் திகழும் ஐக்கிய அரபு அமீரகத்தின் கட்டமைப்பு வடிவமைப்பாளருமான ஷேக் செயித் பின் சுல்தான் அல் நஹ்யானின் மூத்த புதல்வராவார். 2004 நவம்பரில் சுல்தான் அல் நஹ்யான் மரணம் அடைந்த பிறகு அந்தப் பதவிக்கு வந்தவர் தான் ஷேக் கலிபா பின் சைத்.

1990களின் நடுப்பகுதியில் ஷேக் கலீபாவின் பிறப்பிடமான அல் அயின் எனும் இடத்தில் அமைந்திருந்த கல்ப் நிவ்ஸ் அவுலவகத்தின் பொறுப்பாளராக நான் இருந்த காலம். இது துபாயில் இருந்து சுமார் ஒரு மணிநேர தூர பயணத்தில் ஓமான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இடமாகும். ஷேக் செயித்துக்கு மிகவும் பிடித்தமான சோலையாக இந்த இடம் அமைந்திருந்தது.

அல் அயின் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் அவர் பில்லியன் கணக்கான டொலர்களை செலவிட்டார். அங்கு சகல விதமான நவீன வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு அங்கு வாழும் மக்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் வழங்கப்பட்டன. 1960களில் அங்கு எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படும் வரை கஷ்டத்தை தவிர வேறு எதையும் உணராத, அனுபவிக்காத மக்களாகவே அவர்கள் காணப்பட்டனர்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் பல்கலைக்கழகம் அல் அயின் பிரதேசத்தில் தான் அமைந்துள்ளது. கல்வி கற்பதற்கு மிகச் சிறந்த ஒரு இடமாக இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியான

ஆயிரக்கணக்கானவர்கள் இன்று உள்நாட்டில் பல்வேறு பதவி நிலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் ஒருவர் மேலைத்தேசத்தில் கல்வி பயின்ற மஸ்ரேயி என்பவர். மத்திய கிழக்கு மற்றும் பிராந்திய அரசியலில் நன்கு பரிச்சயம் உள்ளவர். நாங்கள் இருவரும் அந்த காலத்தில் அடிக்கடி சந்திப்பதுண்டு. ஒரு தடவை அவர் என்னை முடிக்குரிய இளவரசர் ஷேக் கலீபாவை சந்திப்பதற்காக அவருடைய இடத்துக்கு அழைத்துச் சென்றார்




***ஷேக் செயித் பின் சுல்தான் அல் நஹ்யான் (இடது) ஷேக் கலீபா பின் செயித் அல் நஹ்யான் (வலது)***

மிகவும் வழமைக்கு மாறான ஒரு சூழலில் மக்கள் அங்கு சுதந்திரமாக உரையாடிக் கொண்டிருப்பதை நான் அவதானித்தேன். மஜ்லிஸ் என்று அழைக்கப்பட்ட இந்த இடம் அவர்களது பழங்குடி பாரம்பரியத்தின் ஒரு அங்கமாக இருந்தது.

உதாரணத்துக்கு நான் துபாயில் கல்ப் நிவ்ஸ{க்hகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது 1979 டிசம்பர் 2ல் அமீரகத்தின் எட்டாவது சுதந்திர தினத்துக்கான செய்தி சேகரிப்பின் போது அல்புடீன் மாளிகைக்கு சென்றேன். அது ஒரு நவீன கால பெரிய கட்டிடமாக இருக்கும் என்ற நினைப்போடு தான் அங்கு சென்றேன். ஆனால் அந்த ஒற்றை தரைக் கட்டிடத்தைக் கண்டதும் நான் அதிர்ச்சி அடைந்தேன். ஷேக் செயித் அங்கு மக்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். இன்றைய பல நவீன கட்டிடங்கள் பற்றி எண்ணிக் கூடப் பார்த்திராத காலம் அது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆரம்ப காலம் அது. சுதந்திரமான பல ஆட்சியாளர்கள் ஐக்கிய அரபு அமீரகம் என்ற பெயரில் ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்பட்டனர். சுpல அடிப்படை வசதிகள் மட்டுமே

அப்போது அங்கிருந்தன. அமீரகத்தின் தலைவராகப் பதவியேற்ற ஷேக் செயித் எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்பட முன் தனது மக்கள் எதிர்நோக்கிய கஷ்டங்களை நன்கு உணர்ந்துள்ள ஒரு தலைவராகக் காணப்பட்டார். அதனால் தான் எண்ணெய் மூலம் கிடைத்த செல்வத்தை அவர் தனது நாட்டினதும் மக்களினதும் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தினார். சுகல விதமான நவீன வசதிகளையும் உருவாக்கி தனது மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு அவர் வித்திட்டார்.

வீதி அபிவிருத்தி, துறைமுகங்களின் அபிவிருத்தி, விமான நிலையங்களின் அபிவிருத்தி, தண்ணிர், மின்சாரம், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் என பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி ஆண், பெண் என இரு பாலாருக்கும் இலவச கல்வியையும் வழங்கினார். திறமைகள் மிக்க பலரை இனம் கண்டு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி புத்தி ஜீவிகளை அவர் உருவாக்கினார். அதன் மூலம் தனது நாட்டை முன்னேற்ற பாதையில் வழிநடத்தக் கூடிய ஆற்றலும் அறிவும் மிக்க ஒரு புதிய தலைமுறையை அவர் தோற்றுவித்தார்.

அவர் மேற்கொண்ட மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்க வெளிநாடுகளில் இருந்து கம்பனிகளும் தனிநபர்களும் அங்கு வரத் தொடங்கினர். பொருளாதார வளர்ச்சியில் அவர்களும் பங்கேற்றனர்.

ஷேக் செயித் பின் சுல்தான் அல் நஹ்யான் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட ஒரு தலைவராக திகழ்ந்தார். தனது நாட்டின் மிகவும் தூரமான பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புக்களுக்கு அவர் அடிக்கடி விஜயம் செய்து அங்கு வாழும் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நேரடியாகக் கேட்டு தெரிந்து கொண்டார். கிhமப்புற முதியவர்களுடன் இருந்து உணவு உண்பதை அவர் வழக்கமாக்கி இருந்தார். அவ்வாறு உணவு அருந்தும் போது அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொள்வார். அவற்றில் உடனடி கவனம் செலுத்தி தீர்த்து வைப்பதன் மூலம் அவர் மக்களின் மரியாதைக்கும் பாராட்டுக்கும் உரிய ஒரு ஆட்சியாளராகவும் திகழ்ந்தார்.

ஷேக் செயித் ஒரு சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை அமுல் செய்தார். உலகம் முழுவதும் அரபு மற்றும் முஸ்லிம் நலன்களில் அவர் அக்கறை காட்டினார். பலஸ்தீன விடயத்தின் உறுதியான ஆதரவாளராகவும் அவர் இருந்தார். ஜெரூஸலம் மற்றும் அல் அக்ஸா பிரதேசங்கள் சியோனிஸ யூதக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட

வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். அந்தக் காலப்பகுதியில் அபுதாபி தொலைக்காட்சி கூட இஸ்ரேலை ஒரு பயங்கரவாத நாடு என வர்ணித்தது. பலஸ்தீனர்களைப் படுகொலை செய்தமையில் பங்கேற்றமைக்காக முன்னாள் இஸ்ரேல் பிரதமர் மெனாச்சம் பெகின் ஒரு பயங்கரவாதி என்று அபுதாபி தொலைக்காட்சி வர்ணித்த காலம் அது.

மாறுபட்ட போக்குடைய ஆறு இராஜ்ஜியங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து ஒற்றுமை படுத்தி ஐக்கிய அரபு அமீரகம் என்று பெயரிட்டு அதை உலகின் மிகவும் நவீனமான வசதிகளைக் கொண்ட நாடாக உருவாக்கியது தான் அவர் செய்த மிகப் பெரிய சாதனையாகும். தேசங்களைக் கட்டி எழுப்பும் நவீன அரசியல் வரலாற்றில் இது ஒரு நிகரற்ற உதாரணமும் சாதனையுமாகும்.

எவ்வாறேனும் 1990 ஆகஸ்ட்டில் வளைகுடாப் பிராந்தியத்தை நிலைகுலையச் செய்யும் வகையில் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் இஸ்ரேலிய நாசகார சக்திகளால் ஈராக் தூண்டிவிடப்பட்டு குவைத் ஆக்கிரமிக்கப்பட்ட பின் நிலைமைகள் மாற்றமடையத் தொடங்கின. அமெரிக்க இஸ்ரேல் தலைமையிலான சதித் திட்டத்துக்குள் ஐக்கிய அரபு அமீரகம் தவிர்க்கமுடியாத வகையில் உள்ளீர்க்கப்பட்டது.

தந்தை ஷேக் செயித்தும் மகன் ஷேக் கலீபாவும் ஒரு தேசத்தைக் கட்டி எழுப்புவது எப்படி என்பதற்கு இன்னமும் மிகச் சிறந்த உதாரணமாக உள்ளனர். அதுவும் ஒரு காலத்தில் சொர்க்க புரியாக இருந்த இலங்கை தேசத்தை தமது இனவாத அரசியல் கொள்கைகளாலும் ஊழல் மற்றும் மோசமான முகாமைத்துவம் என்பனவற்றாலும் சின்னாபின்னமாக்கி உள்ள எமது அரசியல்வாதிகளுக்கு இவர்கள் இந்த விடயத்தில் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றனர்.

2004ல் ஷேக் செயித் மரணம் அடைந்ததை அடுத்து பதவிக்கு வந்த அவரது மகன் ஷேக் கலீபா தனது ஒன்றுவிட்ட சகோதரரான ஷேக் முஹம்மத் பின் செயித்தை முடிக்குரிய இளவரசராக்கினார். ஷேக் கலீபாவின் நீண்ட கால சுகவீனம் காரணமாக முடிக்குரிய இளவரசர் தான் 2014 முதல் ஆட்சி விவகாரங்களைக் கவனித்து வருகின்றார். அன்று முதல் இஸ்லாம், முஸ்லிம்கள், அரபு முஸ்லிம் உலக விவகாரம் என எல்லா பிரிவுகளிலும் ஐக்கிய அரபு அமீரகத்தின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆட்சிக்கு பொறுப்பாக இருந்த முடிக்குரிய இளவரசர் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் நெருங்கிய நண்பராகி முஸ்லிம்களுக்கு எதிராக அந்த நாசகார சக்திகளின் தீய நிகழ்ச்சி நிரலையும் அரங்கேற்றி வருகின்றார்.

உதாரணத்துக்கு இஸ்ரேலின் வடிவமைப்பை அமுல் செய்யும் வகையில் சவூதி அரேபியாவுடன் சேர்ந்து அபுதாபியும் குவைத்தும் எகிப்தில் ஏற்பட்ட மாபெரும் மக்கள் எழுச்சியை மழுங்கடிக்கச் செய்து, ஜனநாயக ரீதியாக அந்த நாட்டில் முதல் தடவையாக டொக்டர் மொஹமட் முர்ஷி தலைமையில் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சார்பு ஆட்சியை கவிழ்ப்பதற்காக செயற்கையான எரிபொருள் மற்றும் உணவு பற்றாக்குறையை ஏற்படுத்த 11 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டன. இதன் மூலம் அந்த சதிகாரர்கள் எகிப்தில் இராணுவ சர்வாதிகாரி அப்துல் பத்தாஹ் அல் சிசியை பதவியில் அமர்த்தினர்.

மீண்டும் அமெரிக்க ஐரோப்பிய இஸ்ரேல் நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றும் வகையில் மொஹமட் பின் செயித் சவூதி அரேபியாவுடன் இணைந்து வறுமையில் வாடிக்கொண்டிருந்த யெமன் தேசத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்துள்ளதோடு அந்த நாட்டையும் நாசமாக்கி உள்ளார். பழம்பெருமை மிக்க அந்த நாடு இன்று உலகில் மிக மோசமான மனிதாபிமான பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள ஒரு நாடாக மாறியுள்ளது.

இன்று அவர்கள் பலஸ்தீனத்தையும் ஜெரூஸலத்தையும் கூட கைவிட்டு விட்டு இஸ்ரேலுடன் இரண்டறக் கலந்து விட்டனர். அபுதாபியின் செல்வாக்கில் இன்று மொரோக்கோ, பஹ்ரேன் மற்றும் சூடான் ஆகிய அரபு நாடுகளும் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தி உள்ளன. இஸ்ரேலுடனான இந்த புதிய இராஜதந்திர உடன்பாடுகளுக்கு ‘ஆபிரஹாமின் உடன்படிக்கைகள்’ என்று பெயரும் இட்டுள்ளனர். ஏற்கனவே பலவீனமாகவும் பிளவுபட்டும் உள்ள அரபு தேசங்களை இந்த உடன்பாடுகள் மேலும் பிளவு படுத்தி பலவீனமாக்கி உள்ளன.

ஷேக் முஹம்மதுக்கு இஸ்ரேல் ஆதரவு சிந்தனா வட்டமொன்றால் “கீர்த்திமிக்க கல்வி-தேசத்தலைவர்” என்ற மரியாதைக்குரிய விருது வழங்கப்பட்டது. அண்மிய கிழக்கு கொள்கைகளுக்கான வாஷிங்டன் நிலையத்தால் (WINEP) இந்த விருது வழங்கப்பட்டது. இஸ்ரேலுடனான புதிய இராஜதந்திர உறவுகளை எட்டுவதற்கு அவர் வழங்கிய பங்களிப்புக்காகவே இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது. ஈராக்கை துவம்சம் செய்து மில்லியன்கணக்கான மக்களைக் கொன்று குவித்த முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹென்றி கிஸின்ஜர், முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி டொனி பிளாயர் ஆகியோருக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருமைக்குரிய ஐக்கிய அரபு அமீரகம் இன்று எங்கு செல்கின்றது? எதை நோக்கி செல்கின்றது? அதன் மக்களுக்கு வழங்க அதனிடம் என்ன உள்ளது என்பது எவருக்குமே புரியவில்லை. (முற்றும்)





***படம்1. ஐக்கிய அரபு அமீரகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் ஷேக் மொஹமட் பின் செயித் இஸ்ரேல் பிரதம மந்திரி நப்டாலி பெனட்டுடன்.***

***படம்2. முன்னாள் இஸ்ரேல் பிரதம மந்திரி பெஞ்ஜமின் நெத்தன்யாஹு ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சர் ஷேக் அப்துல்லாஹ் பின் செயித் பின் சுல்தான் அல் நஹயானுடன்***